# அண்மையில் அம்பாறையில் இடம்பெற்ற வன்முறை மீதான மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை

***28 பெப்ரவரி 2018, கொழும்பு, இலங்கை***: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி அம்பாறையிலுள்ள பள்ளிவாசல் மற்றும் பல வியாபார நிலையங்களின் மீது மேற்கொள்ளப்பட்டத் தாக்குதலை வண்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் இவ்வன்முறை தொடர்ச்சியாகப் பரவுவதனைத் தடுப்பதற்கும், குற்றவாளிகளைப் பொறுப்பாக்குவதற்கும் தேவையான நடவடிக்கைகளை, இலங்கையின் சட்டக் கட்டமைப்பிற்குள்ளாக மேற்கொள்ளுமாறு பொருத்தமான அதிகாரிகளை வலியுறுத்துகின்றது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, யுத்தத்திற்கு பிந்தையக் காலப்பகுதியில் சிறுபான்மையினரை இலக்கு வைத்து திட்டமிடப்பட்ட ரீதியில் வெறுப்பு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தனை அவதானித்திருந்தது. அத்துடன் அத்தகைய சம்பவங்களுக்கெதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் மற்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் கூறப்பட்டதன்படி இலங்கையின் சட்டக் கட்டமைப்பில் இவற்றைத் தீர்ப்பதற்கு போதுமான சட்ட ஏற்பாடுகள் காணப்பட்டப் போதிலும், குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் அவர்களுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படவுமில்லை. மேலும் அத்தகைய சம்பவங்கள் தொடர்பாக ஏராளமான காணொளி ஆதாரங்கள் காணப்படுகின்றன. இக் காணொளிகள் குற்றவாளிகளாகக் குற்றஞ் சாட்டப்படுபவர்களினால் அல்லது அவர்களோடு இருக்கின்ற நபர்களினால் பரப்பப்பட்டவை ஆகும். இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொலிஸார் தொடர்ச்சியாகத் தவறி வருகின்றனர். இத்தகைய சூழலில், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது, பொலிஸார் தன்னுடைய பொறுப்புக்களை எவ்விதப் பயம் மற்றும் சார்புமின்றி நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துமாறு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சரானப் பிரதமரை வலியுறுத்துகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று (27 ஆம் திகதி) நடைபெற்ற நல்லிணக்கம் மற்றும் ஒருங்கிணைவிற்கானத் தேசியக் கொள்கை வெளியீட்டில் உரையாற்றிய போது இச்சம்பவம் தொடர்பிலான தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். அத்துடன் அரசாங்கத்தின் வேறு பல முக்கியமானச் செயற்பாட்டாளர்களும் இது தொடர்பானத் தமது கண்டனங்களை வெளியிட்டிருந்தார்கள். இத்தகைய கண்டனங்கள் வெறும் வாய் வார்த்தையாக நின்றுவிட கூடாது. எதிர்கால வன்முறைகளைத் தடுப்பதற்கான, தண்டனையிலிருந்து விடுபடுகின்ற கலாசாரத்தை ஒழிப்பதற்கான மற்றும் அரசாங்கமானது ஒருங்கிணப்பு மற்றும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த உறுதி பூண்டுள்ளது என்ற நம்பிக்கையினை சிறுபான்மையினருக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். 70 ஆவது ஆண்டு சுதந்திர தினத்தை கடந்துவிட்ட இம்முக்கிய காலகட்டத்தில் இந் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறுகின்றமையானது, இலங்கையில் உண்மையான சமாதானமும் நல்லிணக்கமும் ஏற்படுவதற்கு பாரியத் தடையாக அமையும்.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org